UNITED NATIONS NATIONS UNIES

<u>செயலாளர் நாயகம்</u>

..

**மனித உரிமைகள் தின செய்தி**

<u>நியூயோர்க், 2022 டிசம்பர் 10</u>

உலகம் மனித உரிமைகள் குறித்து இதுவரை கண்டிராத, ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்த சவால்களை எதிர்நோக்கியுள்ளது.

மில்லியன் கணக்கிலான மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை அவமதிக்கும் விதமாக பசியும் வறுமையும் அதிகரித்து வருகின்றன.

குடிவாழ்வுக்கான இடம் சுருங்கி வருகின்றது.

அநேகமாக உலகின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஊடக சுதந்திரமும் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பும் அபாயகரமான வீழ்ச்சியில் காணப்படுகின்றது.

நிறுவகங்கள் மீதான நம்பிக்கை அழிந்து வருகின்றது, விசேடமாக இளையோரை குறிப்பிட முடியும்.

கொவிட் 19 பெருந்தொற்றானது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளின் அளவு அதிகரிக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இனவாதம், சகிப்புத்தன்மை இன்மை மற்றும் பாரபட்சம் என்பன மலிந்துவிட்டன.

மும்மை புவி பேரிடர்களான காலநிலை மாற்றம், உயிர்பல்வகைமை அழிவு மற்றும் மாசுபாடு என்பவற்றின் மூலமாக புதிய மனித உரிமை சவால்கள் பிறக்கின்றன.

அத்துடன் சில புதிய தொழினுட்பங்கள் காரணமாக மனித உரிமைகள் எதிர்நோக்கவுள்ள அபாயங்களின் ஆரம்பக்கட்டத்தில் மாத்திரமே நாம் உள்ளோம்.

இந்த சவாலான நேரங்கள் அனைத்து மனித உரிமைகள் - குடிமக்கள், கலாசார, பொருளாதார, அரசியல் மற்றும் சமூகம் என்பவற்றின் மீதான எமது அர்ப்பணிப்பின் மீளெழுச்சிக்கு அழிப்பு விடுக்கின்றது.

2020 இல் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாட்டுக்கான அழைப்பு 1 ஆனது நாம் முகங்கொடுக்கும் சவால்களுக்கான தீர்வுகளின் மையத்தில் மனித உரிமைகளை நிலைநிறுத்தியது.

எமது பொது நிகழ்ச்சிநிரல் பற்றிய எனது அறிக்கையில் இந்த நோக்கமானது வெளிப்படுத்தப் பட்டுள்ளதோடு, மனித உரிமைகள் மீது நிலை நிறுத்தப்பட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட ஒரு சமூக ஒப்பந்தத்தை அது கோருகின்றது.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவானது செயற்பாட்டுக்கான ஒரு வாய்ப்பாக இருக்கும்.

இன்றைய பாதிப்படைந்துள்ள போக்குகளை மாற்றியமைக்கும் செயற்பாடுகளின் ஆதார மையமாக மனித உரிமைகளை வைக்குமாறு அங்கத்துவ நாடுகள், குடிமக்கள் சமூகங்கள், தனியார் துறையினர் மற்றும் ஏனையோரை நான் வலியுறுத்துகின்றேன்.

மனித உரிமைகள், மனிதகுல மேன்மையின் அடித்தளமாகும், அத்துடன் அமைதியான, உட்சேர்ப்பான, நியாயமான, சமத்துவமான மற்றும் சுபீட்சமான சமூகங்களின் ஆதாரமாகும்.

அவையே ஒன்றிணைக்கும் சக்தியும் ஒன்று திரட்டும் முழக்கமும் ஆகும்.

நாம் அனைவரும் பகிர்ந்துகொண்டுள்ள மிக அடிப்படையான விடயமான எமது பொது மனிதாபிமானத்தை அவை பிரதிபலிக்கின்றன.

இந்த மனித உரிமைகள் தினத்தில், அனைத்து உரிமைகளினதும் உலகளாவிய மற்றும் பிரிக்கப்பட முடியாத தன்மையை மீளுறுதிப்படுத்தியவாறு, அனைவரது மனித உரிமைகளுக்காகவும் துணை நிற்போம்.

***